**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி</u>**

**<u>முன்னிலை: திருமதி.V.சிவகாமசுந்தரி, பி.ஏ.,பி.எல்.,</u>**

**<u>மாவட்ட உரிமையியல் நீதிபதி, அறந்தாங்கி.</u>**

2025 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 18-ம் நாள் செவ்வாய்கிழமை

**<u>IA NO.01/2024</u>**

**In**

**<u>O.S No.14/2023</u>**

அருங்குளவன் .....**மனுதாரர்/வாதி**

**//எதிர்//**

1) வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
அறந்தாங்கி.
2) மாவட்ட ஆட்சியர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
அறந்தாங்கி. .....**எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்**

இந்த மனுவானது இந்த நீதிமன்றத்தில் என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.P.லோகநாதன்.,B.Sc.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் திரு.G.கண்ணன்,B.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், இந்த மனு சம்பந்தப்பட்ட அனைத்து ஆவணங்களும் இந்த நீதிமன்றத்தினால் நன்கு கவனமாக பரிசீலனை செய்யப்பட்டும், இந்நாள் வரையில் என் சீரான பரிசீலனையில் இருந்து, இன்று இந்த நீதிமன்றம் வழங்கும்.

**<u>உத்தரவு</u>**

இந்த மனுவானது உரிமையியல் நடைமுறைச் சட்டம் மனுதாரர்/வாதி தரப்பில் கட்டளை 26 விதி 9-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்:-**

வழக்குச்சொத்து ஆதிமுதல் புஞ்சை நிலமாக வகைபாடு செய்யப்பட்டு உள்ளது. தாவா சொத்தினை மனுதாரர் இன்றிலிருந்து சுமார் 40 ஆண்டுகளுக்கு மேலாக அனுபவம் செய்துவருகிறார். தாவா சொத்து நீர்ப்பிடிப்பு பகுதியல்ல என்பதால் அவருக்கு கடந்த 27.01.1990-ம் தேதியில் சிலட்டூர் ஊராட்சியில் தாவா சொத்தினை பொருத்து பட்டா வழங்கத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. மனுதாரருக்கு சொந்தமான சொத்துக்களுடன் கல்லுக்கால் ஊன்றி R.S.பதி சாகுபடி செய்து வருகிறேன். மேலும் தாவா சொத்திற்கு தொடர்ந்து அரசு நிர்ணயிக்கும் தீர்வையினை செலுத்தி ஒரே சேகரமாக வைத்து அனுபவம் செய்து வருகிறார். தாவா சொத்தினை பொருத்து கடந்த ஆண்டில் எந்த உரிமையும், அனுபவமும் இல்லாத ஊர்வணி கிராமத்தைச் சேர்ந்த கருப்பையா, மெய்யாத்தாள் ஆகியோருக்கு அனுபவம் உள்ளதுபோல் பட்டா வேண்டி 1-ம் பிரதிவாதியிடம் மனு கொடுத்ததின் அடிப்படையில் பிரச்சினை ஏற்பட்டு இதில்கண்ட 1-ம் பிரதிவாதி முன்பாக 1796/96-ஆ 3, நாள்:109.03.1996-ல் குறிப்பாணை அனுப்பப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் சிலட்டூர் வருவாய் சரக ஆய்வாளர் அதிமு.203/96, நாள்:15.08.1996-ம் தேதியில் தாவா சொத்து வாதி அனுபவத்தில் உள்ளது என்றும், தொடர்ந்து அடங்கல் கணக்குகளில் பதிவுகள் ஏற்பட்டுள்ளது என்று அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு அதனடிப்படையில் மேற்சொன்ன மனு முடிக்கப்பட்டுள்ளது. தாவா சொத்து தொடர்பாக வருவாய்துறை அதிகாரிகளை அணுகி மனுதாரர் தொடர்ந்து பட்டா வழங்க மனுச் செய்தும் 1,2 பிரதிவாதிகள் எவ்விதமான உத்தரவும் வழங்காமல் இருந்துவந்த நிலையில் இதில்கண்ட 1-ம் பிரதிவாதி, தற்போதுதான் தாவா சொத்தினை அத்துமீறி ஆக்கிரமணம் செய்ததுபோல் நடவடிக்கை எடுக்க முயல்வது தவறாகும். தாவா சொத்திலிருந்து அவரை அப்புறப்படுத்திவிட்டு 1-ம் பிரதிவாதிக்கு தெரிந்த அரசியல் செல்வாக்கு மிக்கவர்களுக்கு பட்டா கொடுப்பதற்காக யாரோ ஒருவரின் தூண்டுதல் பேரில் கடந்த ந.க.ஆ 3/1816/2023-ன்படி ஆக்கிரமிப்பை 09.01.2023- தேதியில் அகற்ற நடவடிக்கை எடுக்கப்போவதாக ஆணை ஒன்றை பிறப்பித்து காலதாமதமாக கடந்த 19.01.2023-ம் தேதியில் மாலை 4 மணியளவில் கிராம உதவியாளர் மூலமாக கடந்த 20.01.2023-ம் தேதியில் ஆக்கிரமிப்பை காவல்துறை அதிகாரியின் துணையுடன் அகற்றப் போவதாக தகவல் கொடுத்துள்ளார்கள். 1-ம் பிரதிவாதியின் உத்தரவானது சட்டப்படியும், நியாயப்படியும் இயற்கை நீதிக்கும் முரணானதாகும். இதில்கண்ட 1-ம் பிரதிவாதிடம் தாவா சொத்தினை ஆக்கிரமனம் செய்வதாக புகார் கொடுத்தது பற்றியோ அதனைத் தொடரந்து அவருக்கு எந்தவிதமான சட்டப்படியான அறிவிப்பும், விசாரணையும் செய்யாமல் ஸ்தல ஆய்வு மேற்கொள்ளாமல் அவர்களாகவே தவறான அறிக்கையின்பேரில் ஆக்கிரமனம் அகற்ற

இந்த 1-ம் பிரதிவாதிக்கு சட்டப்படி எவ்வித உரிமையும் இல்லை. இதில்கண்ட 1-ம் பிரதிவாதிக்கு தொடர்ந்து புல எண்.304-ல் குளங்களை ஆக்கிரமனம் செய்து உள்ள நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க வந்த புகார்களை விசாரணை செய்தபோது அதில் செல்வாக்கு மிக்கவர்கள் வீடு கட்டி இருப்பதால் அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுப்பதற்கு பதிலாக அப்பாவியான மனுதாரருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முனைவது சட்டப்படி தவறானதாகும். நீண்டகாலமாக Permissive Possession வாயிலாக இருந்துவரும் அவரை சட்டப்புறம்பாக வெளியேற்றிவிட்டு வேறுநபர்களுக்கு பட்டா வழங்க முயல்வதும், நீர்நிலை ஆக்கிரமிப்புகளை அகற்ற கொடுக்கப்பட்டுள்ள அரசு ஆணைகளை தவறாக பயன்படுத்தி நடவடிக்கை எடுப்பது தவறானதாகும். அதனால் இவ்வழக்கில் நீதிமன்ற ஆணையர் ஒருவரை நியமனம் செய்து அவரை கிராம நிர்வாக அலுவலர் மற்றும் நில அளவையர் உதவியுடன் வழக்குச் சொத்தினை பார்வையிட்டு அறிக்கையும், வரைபடமும் தாக்கல் செய்ய உத்தரவிட வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரை ஆட்சேபனையின் சுருக்கம் :-**

மனுதார் மனுவில் சொல்லியுள்ள சங்கதிகளில் இந்த எதிர்மனுதார்களால் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளை தவிர மற்றவைகளை மறுப்பதால் அவற்றை மனுதார்/வாதியே கண்டிப்பாக நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். மனுதார்/வாதி இவ்வழக்கை ஆவண சாட்சியம் மூலமே நிரூபிக்க வேண்டுமே தவிர நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்து அவர் மூலம் சாட்சியம் சேகரிப்பது சட்டப்படி ஏற்புடையதல்ல. நீதிமன்ற ஆணையர் மூலம் சாட்சியங்களை சேகரிக்கும் விதமாக இம்மனு அமையப்பெற்றுள்ளதால் இம்மனுவானது சட்டப்படி தள்ளுபடி செய்யக்கூடியதாக உள்ளது. மனுதார்கள்/வாதிகள் இந்த எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகளிடம் இருந்து அபலாபம் அடைய வேண்டி இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளனர். எனவே எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளை அலைகழிக்க வேண்டுமென்று இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டு காலத்தை கடத்தி எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு வீண் மன உளைச்சலை ஏற்படுத்தி வருகின்றனர். மனுதாரர்கள் அசல் வழக்கை நடத்தாமல் வீண் காலதாமதம் செய்யும் நோக்கத்தோடு இம்மனு தாக்கல் செய்துள்ளதால் இம்மனு தள்ளுபடி செய்யக்கூடியதாகும். மனுதாரரின் மனுவில் நல்ல எண்ணம் இல்லை. இம்மனு சட்டப்படியும் நியாயப்படியும் அனுமதிக்கதக்கதல்ல. எனவே மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள இம்மனுவினை இந்த எதிர்மனுதாரர்களின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டி கட்சி செய்யப்பட்டுள்ளது.

**3. தற்போது இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய முக்கிய சங்கதி யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா இல்லையா? என்பதாகும்.**

இம்மனுவானது மனுதாரர் வாதி தரப்பில் தாவா சொத்திற்கு நீதிமன்ற ஆணையர் ஒருவரை நியமனம் செய்து கிராம நிர்வாக அலுவலர் மற்றும் நில அளவையர் உதவியுடன் வழக்கு சொத்தை அளவை செய்து பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்ய மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனுதாரர் தனது சொத்தில் தாவா சொத்து புஞ்சை சாகுபடி நிலமாக இருந்து வருவதாகவும், தாவா சொத்து நீர்பிடிப்பு பகுதி அல்ல என்பதால் 27.03.2013 ம் தேதியும், சிலட்டூர் ஊராட்சி தாவா சொத்து தொடர்பாக வாதிக்கு பட்டா வழங்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாகவும், 1ம் பிரதிவாதி பட்டா வேண்டி கொடுத்த மனுவை மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் தாவா சொத்து வாதியின் அனுபவத்தில் உள்ளதாக மனு முடிக்கப்பட்டுள்ளதாக நிலையில் கடந்த 29.01.2023 ம் தேதிய உத்தரவுப்படி ஆக்கிரமிப்பை அகற்ற போவதாக வாதிக்கு தகவல் கொடுத்ததாகவும் அவ்வாறு ஆக்கிரமிப்புகளை அகற்ற 1ம் பிரதிவாதிக்கு அதிகாரம் இல்லையென்றும் தாவா சொத்து நீண்டகாலமாக மனுதாரர்/வாதியின் சுவாதீனத்தில் இருந்துவரும் சொத்து என்றும் கட்சி செய்யப்பட்டுள்ளது.

எதிர்மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையில் மேற்படி மனுவானது சாட்சியங்களை சேகரிக்கும் வகையில் அமைந்துள்ளதால் மேற்படி மனு சட்டப்படி நிலைநிற்கதக்கதல்ல என்று கட்சி செய்யப்பட்டுள்ளது.

தாவா வழக்கானது மனுதாரர் வாதியால் தாவா சொத்திலிருந்து வாதியை சட்டப்புறம்பான வகையிலின்றி வேறு வகையில் வெளியேற்றக்கூடாது என்று பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு தற்போது தாவா வழக்கானது வா.சா.1 குறுக்கு விசாரணைக்காக நிலுவையில் உள்ள நிலையில் தற்போது இம்மனுவானது தாவா சொத்தை அளவை செய்ய வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்த எதிர்வழக்குரையை பரிசீலித்து பார்க்கும்போது தாவா சொத்தின் அடையாளத்தை பொறுத்து பிரதிவாதிகள் தரப்பில் மறுத்து கட்சி செய்யப்படவில்லை. மாறாக தாவா சொத்திலுள்ள ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டு அரசு வசதி உள்ளதாக கட்சி செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் மனுதாரர் தனது மனுவில் தாவா சொத்தை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்யக்கோருவது நீதிமன்ற ஆணையர் மூலமாக சுவாதீனத்தை நிரூபிக்கும் முயற்சி என்பது தெளிவாகிறது.

சுவாதீனம் குறித்த பொருண்மையை நீதிமன்ற ஆணையர் மூலம் கண்டறிய முடியாது என பல முன்தீர்ப்புகள் உள்ளன. எனவே நீதிமன்ற ஆணையர் கோர மனுதாரர் தரப்பில் கோரப்பட்டுள்ள காரணங்கள் போதுமானவை அல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக இம்மனு செலவுத்தொகையின்றி தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு பின் அவரால் நேரடியாக கணினி சாதனத்தில் பதிவு செய்யப்பட்டு பின் என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2025-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 18-ம் நாள் என்னால் கையொப்பம் செய்யப்பட்டு இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**ஒம்/V.சிவகாமசுந்தரி**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அறந்தாங்கி.**

**சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் பட்டியல்:-**
**மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்**: இல்லை
**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி**: இல்லை
**எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்** : இல்லை

**//உண்மை நகல்//**

**ஒம்/V.சிவகாமசுந்தரி**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அறந்தாங்கி.**

**வரைவு/செவ்வை உத்தரவு**
**I.A.No.01/2024**
**O.S.No.14/2023**
**நாள்.18.02.2025**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**அறந்தாங்கி.**